செ.வெ.எண்.12 நாள்.05.10.2017.

# பத்திரிக்கை செய்தி

வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் பயன்பெறும் வகையில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமும் இணைந்து நடத்தும் தனியார்துறை சிறப்பு வேலைவாய்ப்பு முகாம் 07.10.2017 பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி, திருநெல்வேலி வண்ணார்பேட்டை-ல் வைத்து நடத்தப்படவுள்ளது.

இத்தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் தகவல் தொழில்நுட்பம், சில்லரை வர்த்தகம், சேவைதுறை, ஜவுளித்துறை போன்ற அதிக அளவில் வேலைவாய்ப்புகளை வழங்கக்கூடிய நிறுவனங்கள் உட்பட சுமார் 100 நிறுவனங்கள் பங்கேற்க உள்ளனர். இந்நிறுவனங்களிடமிருந்து இதுவரையிலும் சுமார் 5000 காலிப்பணியிடங்கள் பெறப்பட்டுள்ளது. இதில் மாற்றுத்திறனாளிகளுக்கான காலிபணியிடங்கள் சுமார் 175 பெறப்பட்டுள்ளது. இம்முகாமின் சிறப்பம்சமாக மாற்றுத்திறனாளிகளுக்கென தனியாக அரங்குகள் அமைக்கப்படவுள்ளது. இம்முகாமில் ஐந்தாம் வகுப்பு முதல் முதுநிலை பட்டப்படிப்பு வரை முடித்த 18 வயது முதல் 40வயதிற்குட்பட்ட வேலைநாடுநர்கள் கலந்து கொள்ளலாம்.

இத்தனியார்துறை சிறப்பு வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ளும் வேலைநாடுநர்களுக்கென சிறப்பு முன்னாலோசனை கூட்டம் (Orientation Programme) வரும் 06.10.2017 அன்று பிற்பகல் 02.00 மணிக்கு திருநெல்வேலி வண்ணார்பேட்டையில் உள்ள பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி கலை அரங்கத்தில் வைத்து நடைபெறவுள்ளது. 07.10.2017 அன்று நடைபெறும் சிறப்பு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு வேலைவாய்ப்பு கிடைக்கப் பெற்று பயனடைய ஏதுவாக இந்த முன்னாலோசனைக் கூட்டத்தில் பங்கேற்குமாறும் வேலைநாடுநர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த முன்னாலோசனைக் கூட்டத்தில் பங்கேற்க விருப்பமுள்ள வேலையளிப்பவர்களும் (Employers) கலந்து கொள்ளலாம்.

மேலும் இவ்வேலைவாய்ப்பு முகாமில் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் வழியாக தொழிற்பழகுநர் பயிற்சிக்கும் (Apprenticeship) பதிவுகள் மேற்கொள்ளலாம். இத்தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் பங்கேற்க விருப்பமுள்ளவர்கள் தங்களது கல்வி சான்று மற்றும் இதர சான்றுகள் மற்றும் புகைபடத்துடன் பங்கேற்று வேலைவாய்ப்பு கிடைக்கப்பெற்று பயனடையுமாறும், இவ்வேலைவாய்ப்பு முகாமில் பணிநியமனம் பெறும் பதிவுதாரர்களுடைய வேலைவாய்ப்பு பதிவுமூப்பு இரத்து செய்யப்பட மாட்டாது எனவும் இம்முகாம் தொடர்பான மேலும் விபரங்களுக்கு **deo.tnv@gmail.com** என்ற இணையதள முகவரியிலோ அல்லது **0462-2500103** என்ற மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.